## <u>புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சி அலுவலகத்தில் 30.11.2023ஆம் நாளன்று நடைபெற்ற சாதாரண கூட்டத்தின் தீர்மான நகல்</u>

<u>பொருள் எண்.01</u>

நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் செயல்முறை உத்தரவு ந.க.எண்.6003/2023/SS2 நாள்.25.10.2023-ல் பள்ளி மேம்பாட்டு மானியம் – மூலதன பணி (Capital Work), இயக்கம் மற்றும் பராமரிப்பு பணி (O&M Work) 2022-2023 மற்றும் 2023-2024ன் கீழ் இந்நகராட்சிக்கு கீழ்கண்ட பணிகள் ஒதுக்கீடு செய்து நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

| வ.எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை ரூ. இலட்சத்தில் |
|---|---|---|
| 1 | புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சிக்கு சொந்தமான ஜவஹர் மெயின் ரோடு நகராட்சி துவக்கப்பள்ளியில் ஏற்கனவே உள்ள பழைய வகுப்பறைகளை புனரமைப்பு செய்தல், பள்ளியை சுற்றி புதிதாக சுற்றுச்சுவர் கட்டுதல் மற்றும் புதிய நுழைவு வாயில் கதவு பொருத்துதல் பணி | 8.50 |
| 2 | புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சிக்கு சொந்தமான இராமநாதபுரம் நகராட்சி துவக்கப்பள்ளியில் ஏற்கனவே உள்ள பழைய வகுப்பறைகளை புனரமைப்பு செய்தல் பணி | 4.75 |
| 3 | புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சிக்கு சொந்தமான ஜெ.ஜெ.நகர் நகராட்சி நடுநிலைப்பள்ளியில் உள்ள சமையற்கூடம் புனரமைத்தல் மற்றும் பள்ளியை சுற்றி புதிதாக சுற்றுச்சுவர் கட்டுதல் பணி | 17.00 |
| | **மொத்தம்** | **30.25** |

மேற்கண்ட பணியை பள்ளி மேம்பாட்டு மானியம் – மூலதன பணி (Capital Work), இயக்கம் மற்றும் பராமரிப்பு பணி (O&M Work) 2022-2023 மற்றும் 2023-2024ன் கீழ் மேற்கொள்ள அனுமதி வழங்கப்பட்டுள்ளது மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் சமர்பிக்கப்படுகிறது.

**(ந.க.எண்.840/2023/இ1)**

**அலுவலகக்குறிப்பு :-**

அ) மன்றம்அனுமதிக்கலாம்.

**தீர்மான எண் : 177**

**தீர்மானம் : அனுமதிக்கப்படுகிறது**

<u>பொருள் எண்.02</u>

ஈரோடு மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் கடித ந.க.எண்.58/2023/மு.அ நாள்.06.11.2023-ன் கடிதத்தில் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி திட்டத்தின் கீழ் செயல்பட்டு வரும் அங்கன்வாடி மையங்கள் அஸ்பெட்டாஸ் கூரையில் செயல்பட்டு வருவதால் குழந்தைகளுக்கு பல்வேறு உடல்நல பாதிப்புகள் ஏற்படுவதாக கருதப்படுகிறது என்றும், மேலும் அஸ்பெட்டாஸ் கூரையை உடனடியாக மாற்றி பஃப் கூரைகளாக அமைக்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளதை தொடர்ந்து, இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.08, இராஜாஜி வீதியில் ஏற்கனவே உள்ள அங்கன்வாடி மையம் அஸ்பெட்டாஸ் கூரையில் செயல்பட்டு வருவதால் அதனை

மாற்றி புதிதாக பஃப் கூரைகள் அமைத்தல் பணிக்கு ஆகும் செலவினம் ரூ.5.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**(ந.க.எண்.1427/2023/இ1)**

**அலுவலகக்குறிப்பு :-**

அ) மன்றம்அனுமதிக்கலாம்.

ஆ)மேற்கண்ட பணியினை இந்நகராட்சி பொதுநிதி 2023-2024ன் கீழ் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

இ)பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்றதலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதை மன்றம் ஏற்கலாம்.

**தீர்மான எண் : 178**

**தீர்மானம் : அனுமதிக்கப்படுகிறது**

**<u>பொருள் எண்.03</u>**

புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சியில் 15வது மத்திய நிதிக்குழு மான்யம் 2023-2024 TIED GRANT-ன் கீழ் இந்நகராட்சிக்குட்பட்ட நுண்ணுயிரி உரமாக்கல் மையத்தில் குப்பைகளை எரிப்பதற்காக (Capacity 2.0 Mt Per Day For Incineration Of Non - Recyclable Waste) புதிதாக Incinerator (1 No) நிறுவுதல் பணிக்காக 10.11.2023 அன்று நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளியில் முதல் அழைப்பில் கீழ்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.

| வ.எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை | ஒப்பந்ததாரர் பெயர் | விழுக்காடு |
|---|---|---|---|---|
| 1. | புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சிக்குட்பட்ட நுண்ணுயிரி உரமாக்கல் மையத்தில் குப்பைகளை எரிப்பதற்காக (Capacity 2.0 Mt Per Day For Incineration Of Non - Recyclable Waste) புதிதாக Incinerator (1 No) நிறுவுதல் பணி | 20.00 இலட்சம் | NAC INDUSTRIES, NAMAKKAL | 0.05% மதிப்பீட்டை விட குறைவு |
| | | | SRI DHARSHINI TRADERS, NAMAKKAL | 0.005% மதிப்பீட்டை விட குறைவு |

வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளியை ஒப்புநோக்கியதில் மதிப்பீட்டு விலை விகிதத்தினைவிட 0.05% குறைவாக வழங்கியுள்ள NAC INDUSTRIES, NAMAKKAL அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**(ந.க.எண்.577/2023/இ1)**

**அலுவலக குறிப்பு :**

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி ஆணை வழங்கியதை மன்றம் ஏற்கலாம்.

**தீர்மான எண் : 179**

**தீர்மானம் : அனுமதிக்கப்படுகிறது**

பொருள் எண்.04

புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சிக்கு சொந்தமான பொது சுகாதாரப்பிரிவில் இயங்கி வரும் கழிவுநீர் வாகனத்திற்கு (TN36 AZ 7382) 2023-2024ம் ஆண்டிற்கான வாகன காப்பீடு புதுப்பிக்க வேண்டியுள்ளதால் உத்தேச செலவினம் ரூ.33,000/- மட்டும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

(ந.க.எண். 1274/2023/எச்1)

அலுவலக குறிப்பு:

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று மேல் நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் அனுமதி ஏற்கலாம்.

தீர்மான எண் : 180

தீர்மானம் : அனுமதிக்கப்படுகிறது

பொருள் எண்.05

புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சியில் இயங்கும் பொதுப்பிரிவு, பொது சுகாதார பிரிவு, வருவாய் பிரிவு, பொறியியல் பிரிவு மற்றும் நகரமைப்பு பிரிவு ஆகிய பிரிவு பணிகளுக்கு தேவையான எழுது பொருட்கள் மற்றும் பதிவேடுகள் விநியோகம் செய்ய விலைப்புள்ளி கோரப்பட்டது அதன்படி வரப்பெற்ற விலைப்புள்ளிகளின் விவரம் கீழ்க்கண்டவாறு

| வ.எண் | விலைப்புள்ளி விவரம் |
|---|---|
| 1 | Erode District, Printer industrial Co-operative Society Limited, Erode. |
| 2 | Print Factory, Sathyamanagalam, Erode district. |
| 3 | Sree Hari Fine Arts Sathyamangalam, Erode District. |

வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் அனைத்து இனங்களுக்கும் குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ள திருவாளர்.Erode District, Printer industrial Co-operative Society Limited, Erode என்ற நிறுவனம் மூலம் விநியோகம் செய்ய மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.

ந.க.எண்.1568/2022/சி1

அலுவலகக் குறிப்பு:

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று மேல் நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் ஏற்கலாம்.

தீர்மான எண் : 181

தீர்மானம் : அனுமதிக்கப்படுகிறது

பொருள் எண்.06

இந்நகராட்சிக்கு சொந்தமான வாரச்சந்தை பகுதியில் சாலையோரங்களில் அனுமதியின்றி மாட்டிறைச்சி கடைகள் செயல்பட்டு வந்தது. சுத்தம் மற்றும் சுகாதாரமின்றி அருவருக்கத்தக்க வகையில் சாலையோரங்களில் வியாபாரம் செய்வதை இந்நகராட்சி வார்டுஎண்.15 மற்றும் 16 ஆகிய வார்டு பொது மக்கள்

08.12.2022 அன்று புகார் தெரிவித்தனர். அதனடிப்படையில் மேற்படி மாட்டிறைச்சி கடைகளின் ஆக்கிரமிப்பு அகற்றப்பட்டது.

இந்நகராட்சியில் மாட்டிறைச்சி கடைகள் நடத்தி வந்த 14 நபர்களுடன் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியினரால் இவ்வலுவலகத்தில் குடியேறும் போராட்டம் 11.04.2023 அன்று நடைபெற்றது. தகவல் அறிந்த மாண்புமிகு தமிழ்நாடு வீட்டுவசதி துறை அமைச்சர் அவர்களின் தலைமையில் அமைதி பேச்சு வார்த்தை நடைபெற்றது. இதில் ஏற்கனவே, மாட்டிறைச்சிக்கடை நடத்தி வந்த 14 நபர்களுக்கு மாட்டிறைச்சி கடைகள் கட்டி சம்மந்தப்பட்டவர்களுக்கு குழுக்கள் முறையில் ஒதுக்கீடு செய்ய தெரிவிக்கப்பட்டதை தொடர்ந்து மேற்படி போராட்டங்கள் கைவிடப்பட்டது. தற்போது 14 மாட்டிறைச்சிக்கடைகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளதை தொடர்ந்து மேற்படி கடைகளை சம்மந்தப்பட்ட 14 நபர்களுக்கு வாடகை தொகை தலா ரூ.2000/- (GST உட்பட) நிர்ணயம் செய்யவும், வைப்புத்தொகை ரூ.5000/-மும் நிர்ணயிக்கப்பட்ட மாத வாடகையில் 12 மாத வாடகை தொகை கூடுதல் வைப்புத்தொகையாகவும் செலுத்த மேற்படி பேச்சு வார்த்தையில் உடன்படிக்கை ஏற்பட்டதை தொடர்ந்து மேற்படி கடைகளை சம்மந்தப்பட்டவர்களுக்கு குழுக்கள் முறையில் ஒதுக்கீடு செய்ய மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

(ந.க.எண். 1929/2022/அ2)

அலுவலக குறிப்பு:

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று தொடர் நடவடிக்கை எடுத்ததை மன்றம் ஏற்கலாம்.

**தீர்மான எண் : 182**

**தீர்மானம் : அனுமதிக்கப்படுகிறது**

**பொருள் எண்.07**

இந்நகராட்சிக்கு சொந்தமான பொது சுகாதாரப்பிரிவில் இயங்கி வரும் கழிவுநீர் வாகனத்திற்கு (TN36 AZ 7382) GPS கருவி பொருத்த நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை (MA-3) அரசாணை எண்(MS).183ன் படி, GPS கருவி பொருத்த அதற்கான உத்தேச செலவினம் ரூ.9000/- மட்டும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

(ந.க.எண். 1275/2023/எச்1)

அலுவலக குறிப்பு:

1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று மேல் நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் ஏற்கலாம்.

**தீர்மான எண் : 183**

**தீர்மானம் : அனுமதிக்கப்படுகிறது**

**பொருள் எண்.08**

புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சி நகர்மன்ற தலைவர் பயன்பாட்டில் இயங்கும் ஈப்பு வாகனம் எண். TN 36 BU 0659, 10,000 கி.மீ ஓடியுள்ளதாலும், மேற்கண்ட

வாகனத்தை பழுது மற்றும் பராமரிப்பு பணி மேற்கொள்ள ஆகும் உத்தேச செலவினம் ரூ.40,000/- மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**(ந.க.எண். 1383/2023/இ1)**

**அலுவலக குறிப்பு:**

1) மன்றம் அனுமதிக்கலாம்
2) நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று பணி மேற்கொண்டதை மன்றம் ஏற்கலாம்.

**தீர்மான எண் : 184**

**தீர்மானம் : அனுமதிக்கப்படுகிறது**

**பொருள் எண்.09**

புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சி பொதுநிதி 2023-2024ன் கீழ் புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சியின் வாரச்சந்தை பகுதியில் மறுசுழற்சிக்கு பயன்படுத்த முடியாத பிளாஸ்டிக் கழிவுகளை லாரி மற்றும் ஜேசிபி இயந்திரத்தின் மூலமாக ஏற்றி அல்ட்ரா டெக் சிமெண்ட் ஆலைக்கு அனுப்பி வைத்தல் பணிக்காக 27.09.2023 அன்று முதல் அழைப்பில் கீழ்கண்டவாறு விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.

| வ.எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை ரூ. இலட்சத்தில் | ஒப்பந்ததாரர் பெயர் | விழுக்காடு |
|---|---|---|---|---|
| 1. | புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சியின் வாரச்சந்தை பகுதியில் மறுசுழற்சிக்கு பயன்படுத்த முடியாத பிளாஸ்டிக் கழிவுகளை லாரி மற்றும் ஜேசிபி இயந்திரத்தின் மூலமாக ஏற்றி அல்ட்ரா டெக் சிமெண்ட் ஆலைக்கு அனுப்பி வைத்தல் பணி. | ரூ.2.00 இலட்சம் | SAN CONSTRUCTION COIMBATORE | 13.24% மதிப்பீட்டை விட குறைவு |
| | | | GREEN ROADLINE COIMBATORE | 9.61% மதிப்பீட்டை விட குறைவு |
| | | | GREENENVIRO MANAGEMENT SOLUTION, ARIYALUR | 9.21% மதிப்பீட்டை விட குறைவு |

வரப்பெற்ற விலைப்புள்ளியை ஒப்புநோக்கியதில் மதிப்பீட்டு விலை விகிதத்தினை விட 13.24% குறைவாக வழங்கியுள்ள SAN CONSTRUCTION COIMBATORE அவர்களின் விலைப்புள்ளியை ஏற்க மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**(ந.க.எண். 1050/2023/எச்1)**

**அலுவலக குறிப்பு :**

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ)நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று பணி மேற்கொண்டதை மன்றம் ஏற்கலாம்.

**தீர்மான எண் : 185**

**தீர்மானம் : அனுமதிக்கப்படுகிறது**

**பொருள் எண்.10**

புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சிக்கு சொந்தமான திரு.வி.க திடல் வணிக வளாக கடை எண்.4 மற்றும் 5-ன் நடுவில் காலியாக உள்ள 4A கடைக்கு மாத வாடகை அடிப்படையில் கடை வாடகை நிர்ணயம் செய்து பொது ஏலம் மூலம் கடை வாடகைக்கு விட ஏல வைப்புத்தொகை ரூ.50,000/- கூடுதல் முன்

வைப்புத்தொகையும், ஏலம் உறுதி செய்யப்பட்டவுடன் 12 மாத வாடகை முன்பணம் தொகை பெறப்பட்டு மாதந்தோறும் வாடகை அடிப்படையில் நிர்ணயம் செய்து மேல்நடவடிக்கை தொடர மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**(ந.க.எண்.846/2023/அ1)**

**அலுவலகக்குறிப்பு:–**

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) நகர்மன்றத்தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று மேல்நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் ஏற்கலாம்.

**தீர்மான எண் : 186**

**தீர்மானம் : அனுமதிக்கப்படுகிறது**

**பொருள் எண்.11**

புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சிக்கு சொந்தமான கீழ்க்கண்ட கடைகள், முதல் மூன்றாண்டு மற்றும் இரண்டாம் மூன்றாண்டு குத்தகை இனங்கள் புதுப்பிக்கவும், வாடகை 15% வரியை உயர்த்தவும், வரிசை எண்.01 மற்றும் 02–ல் உள்ள கடைகள் 01.07.2023 முதல் கணினியில் கேட்பினை பதிவேற்றம் செய்யவும், வரிசை எண்.03 முதல் 08 வரையுள்ள கடைகளுக்கு 01.09.2023 முதல் கணினியில் கேட்பினை பதிவேற்றம் செய்யவும், வரிசை எண்.09 முதல் 11 வரையுள்ள கடைகளுக்கு 01.10.2023 முதல் கணினியில் கேட்பினை பதிவேற்றம் செய்யவும் மற்றும் வரிசை எண்.12 முதல் 17 வரையுள்ள கடைகளுக்கு 01.11.2023 முதல் கணினியில் கேட்பு எழுப்பவும், கடைகளின் உரிமத்தினை புதுப்பிக்கவும்,மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ.எண் | வரி விதிப்பு எண் | கடை விவரம் | உரிமயாளர் பெயர் | நீட்டிப்பு செய்யப்படும் குத்தகை காலம் | புதுப்பிக்கப் படும் முறை |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| 1 | 060/BD01/00039 | ஊராட்சி ஒன்றிய கடை எண்.03 | திரு.கே.கண்ணன் | 01.07.2023 முதல் 30.06.2026 வரை | இரண்டாம் முறை |
| 2 | 060/BD01/00041 | ஊராட்சி ஒன்றிய கடை எண்.01 | திரு.என்.ரங்கநாதன் | 01.07.2023 முதல் 30.06.2026 வரை | இரண்டாம் முறை |
| 3 | 060/SC03/00050 | எம்.ஜி.ஆர் வணிக வளாக கடை எண்.11 | திருமதி.ஜி.சாந்தி | 01.09.2023 முதல் 31.08.2026 வரை | முதல் முறை |
| 4 | 060/SC03/00052 | மறைமலையடிகள் வணிக வளாக கடை எண்.03 | K1008 கூட்டுறவு அங்காடி | 01.09.2023 முதல் 31.08.2026 வரை | முதல் முறை |
| 5 | 060/SC03/00053 | ஜவஹர் மெயின் ரோடு பழைய கடை எண்.24 | திருமதி.ராணி | 01.09.2023 முதல் 31.08.2026 வரை | முதல் முறை |
| 6 | 060/SC03/00057 | எம்.ஜி.ஆர் வணிக வளாக கடை எண்.10 | திருமதி.செல்வி | 01.09.2023 முதல் 31.08.2026 வரை | முதல் முறை |
| 7 | 060/SC03 | எம்.ஜி.ஆர் | திருமதி.கே.ஜானகி | 01.09.2023 முதல் | முதல் |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | /00058 | வணிக வளாக கடை எண்.13 | | 31.08.2026 வரை | முறை |
| 8 | 060/SC03 /00061 | மறைமலையடிகள் வணிக வளாக கடை எண்.04 | K1008 கூட்டுறவு அங்காடி | 01.09.2023 முதல் 31.08.2026 வரை | முதல் முறை |
| 9 | 060/BD01/ 00040 | ஊராட்சி ஒன்றிய கடை எண்.02 | திரு.சையது நதீம் | 01.10.2023 முதல் 30.09.2026 வரை | இரண்டாம் முறை |
| 10 | 060/BD01/ 00043 | ஜவஹர் மெயின் ரோடு பழைய கடை எண்.06 | திரு.பி.எஸ்.பழனிச்சாமி | 01.10.2023 முதல் 30.09.2026 வரை | இரண்டாம் முறை |
| 11 | 060/BD01/ 00044 | ஜவஹர் மெயின் ரோடு பழைய கடை எண்.21 | திரு.ஆர்.சிவா | 01.10.2023 முதல் 30.09.2026 வரை | இரண்டாம் முறை |
| 12 | 060/SC03 /00062 | சத்திரம் ரோடு கிழக்கு பார்த்த கடை எண்.02 | திரு.ந.பிரகதீஷ் | 01.11.2023 முதல் 31.10.2026 வரை | முதல் முறை |
| 13 | 060/SC03 /00063 | சத்திரம் ரோடு கிழக்கு பார்த்த கடை எண்.01 | திரு.பா.விகாஷ் | 01.11.2023 முதல் 31.10.2026 வரை | முதல் முறை |
| 14 | 060/SC03 /00064 | சத்திரம் ரோடு கிழக்கு பார்த்த கடை எண்.03 | திரு.எ.டேவிட் | 01.11.2023 முதல் 31.10.2026 வரை | முதல் முறை |
| 15 | 060/SC03 /00065 | சத்திரம் ரோடு கிழக்கு பார்த்த கடை எண்.04 | திருமதி.ஆர்.ரேணுகா | 01.11.2023 முதல் 31.10.2026 வரை | முதல் முறை |
| 16 | 060/SC03 /00066 | சத்திரம் ரோடு கிழக்கு பார்த்த கடை எண்.05 | திரு.கே.அன்வர் பாட்ஷா | 01.11.2023 முதல் 31.10.2026 வரை | முதல் முறை |
| 17 | 060/SC03 /00067 | சத்திரம் ரோடு கிழக்கு பார்த்த கடை எண்.06 | திரு.டி.கணேசன் | 01.11.2023 முதல் 31.10.2026 வரை | முதல் முறை |

(ந.க.எண். 1135/2023/அ1)

அலுவலக குறிப்பு:

அ) மன்றம் அனுமதிக்கலாம்

ஆ)நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று மேல்நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் ஏற்கலாம்.

**தீர்மான எண் : 187**

**தீர்மானம் : அனுமதிக்கப்படுகிறது**

**பொருள் எண்.12**

வாரச்சந்தை மற்றும் தினசரி சந்தைமூன்று ஆண்டுகளுக்கு (2023–2024 முதல் 2026–2027 வரை) அமல்படுத்தப்படும் சுங்க வசூல் கட்டணங்கள் வசூல் செய்துகொள்ள ஒப்பந்தப்புள்ளி அடிப்படையில் ஈரோடு மாவட்ட அரசிதழில்

06.02.2015 அன்று சிறப்பு வெளியீடாக வெளியிடப்பட்ட2015–2016 முதல் 2017–2018 வரை உள்ள ஆண்டிற்கான ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி அறிக்கையில் குறிப்பிட்டுள்ள வாரச்சந்தை மற்றும் தினசரி சந்தைக்கான பொது மற்றும் சிறப்பு நிபந்தனைகள் இதற்கும் பொருந்தும் என்ற நிபந்தனைகளுடன் கீழ்க்காணும் சுங்க இனங்களுக்கான வசூல் செய்ய வேண்டிய கட்டணங்கள் மாற்றியமைக்கப்பட்டுள்ளது.

**<u>ஆண்டு உரிம இனம் விபரம்</u>**

**1. தினசரி சந்தையில் கட்டணம் வசூல் செய்யும் உரிமம்**

| வ. எண் | உரிமங்களின் பெயர் | உரிமத்திற்கு செலுத்த வேண்டிய ஏல வைப்புத் தொகை (வங்கி வரைவோலையாக) | உரிமத்திற்கு செலுத்த வேண்டிய கூடுதல் வைப்புத் தொகை(வங்கி வரைவோலையாக) | ஏலம் உறுதியான பின் செலுத்த வேண்டிய (ஏல முன் வைப்புத் தொகை நீங்களாக) | வருமான வரிச் சட்டத்தின் படி செலுத்த வேண்டிய வருமான வரி மற்றும் GST வரி |
|---|---|---|---|---|---|
| 1 | தினசரி சந்தையில் கட்டணம் வசூல் செய்யும் உரிமம், தினசரி சந்தைக்குள் உள்ள 10x10 அளவிலான 192 கடைகள் மற்றும் நகராட்சி எல்லைக்குள் விற்பனைக்கு கொண்டு வரும் பொருட்களும் கட்டணம் வசூல் செய்யும் உரிமம் | ரூ.5,00,000 /– | 15,00,000/–க்கு சொத்து மதிப்பு சான்று அல்லது கூடுதல் வைப்புத்தொகையாக ரூ.5,00,000/– | ஏலத்தொகையில் 12 மாத உரிம தொகை கூடுதல் வைப்புத் தொகையாக செலுத்த வேண்டும். | 2% IT<br>18% GST |

**<u>அனுபந்தம்</u>**

**<u>பட்டியல் – I</u>**

**புன்செய்ப் புளியம்பட்டி வாரச்சந்தை மற்றும் தினசரி சந்தையின் நுழைவாயிலில் வசூல் செய்ய வேண்டிய கட்டணங்கள்**

| வ. எண் (1) | விவரம் (2) | கட்டணம் ரூ.பை. (3) |
|---|---|---|
| 1 | பாரமேற்றிய டாரஸ், லைலாண்டு லாரி 1–க்கு | 150.00 |
| 2 | பாரமேற்றிய டாரஸ், லைலாண்டு லாரி வாகனம் 1–க்கு | 100.00 |
| 3 | பாரமேற்றிய டாரஸ், லாரி,ஈச்சர் 1–க்கு | 120.00 |
| 4 | பாரமேற்றாத மோட்டார் லாரி, ஈச்சர் லாரி 1–க்கு | 100.00 |
| 5 | பாரமேற்றிய மோட்டார் மினி லாரி,டெம்போ லாரி 1–க்கு | 100.00 |
| 6 | பாரமேற்றாத மோட்டார் மினி லாரி, டெம்போ லாரி 1–க்கு | 70.00 |
| 7 | பாரமேற்றிய பவர் டில்லர், மூன்று சக்கர மினி டெம்போ 1–க்கு | 70.00 |
| 8 | பாரமேற்றாத பவர் டில்லர், மூன்று சக்கர மினி டெம்போ 1–க்கு | 40.00 |
| 9 | பாரமேற்றிய 2 சக்கரங்கள் உள்ள இரட்டை மாட்டு வண்டி 1–க்கு | 60.00 |
| 10 | பாரமேற்றிய 2 சக்கரங்கள் உள்ள ஒற்றை மாட்டு வண்டி 1–க்கு | 40.00 |

| | | |
|---|---|---|
| 11 | பாரமேற்றாத 2 சக்கரங்கள் உள்ள ஒற்றை அல்லது இரட்டை மாட்டு வண்டி 1–க்கு | 20.00 |
| 12 | பாரமேற்றிய 2 சக்கரங்களுள்ள கை வண்டி 1–க்கு | 25.00 |
| 13 | பாரமேற்றாத 2 சக்கரங்களுள்ள கை வண்டி 1–க்கு | 10.00 |
| 14 | திண்பண்டங்கள், பானங்கள் மற்றும் சில்லறை சாமான்கள் முதலானவை விற்க உபயோகப்படுத்தும் பாரமேற்றிய அல்லது பாரமேற்றாத சிறிய கைவண்டி 1–க்கு உள்ளே போக ஒவ்வொரு தடவைக்கும். | 25.00 |
| 15 | சர்க்கரை, வெல்லம், தானியங்கள், பருப்பு வகைகள், ஜவுளி, பாக்கு, தேங்காய், பாய், நிலக்கடலை, பருத்தி, பருத்திக்கொட்டை, புண்ணாக்கு, மிளகாய், வளையல், புளி, எண்ணெய், திண்பண்டங்கள், கூடை, கயிறு முதலியவை தலை சுமை 1–க்கு அல்லது பை 1–க்கு | 10.00 |
| 16 | வாழைப்பழம், வெங்காயம், பல்வகை மண்பாண்டங்கள், வெற்றிலை, காய்கறிவகை, பழவகை, சீமாறு முதலியற்ற எல்லாத் தலை சுமை1–க்கு அல்லது பை 1–க்கு | 10.00 |
| 17 | விற்பனைக்கு வரும் பசுமாடு, எருதுமாடு, எருமை, கன்றுக்குட்டி 1–க்கு தனித்தனியாக | 50.00 |
| 18 | பால் ஊட்டும் கன்று 1–க்கு | 25.00 |
| 19 | செம்மறி ஆடு, வெள்ளாடு, பன்றி குட்டி 1–க்கு | 30.00 |
| 20 | செம்மறி ஆடு குட்டி, வெள்ளாடு குட்டி, பன்றி குட்டி 1–க்கு | 15.00 |
| 21 | சேவல் அல்லது கோழி 1–க்கு | 10.00 |
| 22 | பதனிடப்பட்ட ஆட்டுத்தோல் 1–க்கு | 20.00 |
| 23 | பதனிடப்பட்ட எருமை, மாட்டுத்தோல் 1–க்கு | 30.00 |
| 24 | துண்டுத் தோல் சுமை 1–க்கு | 10.00 |
| 25 | மிதிவண்டியில் (சைக்கிள்) பாரமேற்றி வருவதற்கு மிதிவண்டி 1–க்கு | 15.00 |

மேற்குறிப்பிட்டுள்ள வரிசை எண்.1 முதல் 14 வரை உள்ள வாகனங்களில் சந்தைக்கு வெளியே செல்லும் போதும் உள்ளே வரும் போதும் பாரமேற்றியது பாரமேற்றாமல் இருந்தாலும் அதற்குரிய கட்டணங்கள் மீண்டும் செலுத்த வேண்டும்.

**<u>சந்தைக்குள் செய்ய வேண்டிய வசூல்</u>**

**<u>பட்டியல்–II</u>**

| | | |
|---|---|---|
| 1 | தலைச்சுமையில் கொண்டு வரும் காய்கறி, கொத்துமல்லி இலை, கருவேப்பிலை இவைகளுக்கு வாரசந்தைக்குள் வைத்து விற்பதற்கு 25 சதுரடி வரை ரூ.35 அதற்கு மேல் 1 சதுரடிக்கு ரூ.1 சேர்த்து செலுத்த வேண்டும். | 35.00 |
| 2 | வரிசை எண்.1ல் குறிப்பிட்டுள்ள கடையை தவிர்த்து மீதமுள்ள கடைகள் கூடாரம் அல்லது பந்தல் போட்ட எல்லா விதமான கடைக்கு 25 சதுரடிக்கு ரூ.50 அதற்கு மேல் ஒவ்வொரு சதுரடிக்கும் ரூ.2 சேர்த்து செலுத்த வேண்டும். | – |
| 3 | வரிசை எண்.1ல் குறிப்பிட்டுள்ள கடையை தவிர்த்து கூடாரம் அல்லது பந்தல் போடாத கடை 1–க்கு 25 சதுரடி வரை ரூ.30 அதற்கு மேல் ஒவ்வொரு சதுரடிக்கும் ரூ.1 சேர்த்து செலுத்த வேண்டும். | – |
| 4 | தள்ளு வண்டியில் விற்பனை செய்யும் வாழைக்காய் அல்லது பழம் அல்லது பிறவகை பழங்களுக்கு மட்டும். | 30.00 |
| 5 | வாரசந்தை தினத்தன்று சில்லரையாக விற்பனை செய்யும் அல்லது மொத்தமாக விற்பனை செய்யும் மோட்டார், லாரி, டெம்போ அல்லது இதர வாகனங்களுக்கும் அனுபந்தத்தில் | – |

| | | |
|---|---|---|
| | குறிப்பிட்டுள்ள வாகனங்களுக்கு ஏற்றார் போலே சுங்கம் வசூல் செய்யப்படும். | |
| 6 | வாரச்சந்தை மற்றும் தினசரி சந்தையின் உள் மாடு, பன்றி, ஆடுகளின் இறைச்சி விற்க தடை விதிக்கப்படுகிறது. | – |
| 7 | வாரச்சந்தையில் ஒவ்வொரு கடைக்கும் தினசரி கட்டணம் | 60.00 |
| 8 | வாரச்சந்தையில் காலியிடத்தில் 30சதுரடிக்கு (5x6) வைத்து வியாபாரம் செய்ய | 40.00 |

குறிப்பு

1. பைகளில் போட்ட காய்கறிகளை சாக்கு மூட்டையில் நுழைத்து வைத்து மூட்டையாக கொண்டு வந்தால், பை கணக்கில் கட்டணம் வசூலிக்கப்படும்.
2. தலைச்சுமையாகவோ அல்லது மோட்டார் பைக் போன்று பிற வாகனங்கள் மூலமாகவோ, கொண்டு வரும் பதனிடப்பட்ட அல்லது பதனிடப்படாத ஆட்டுத்தோல் மற்றும் மாட்டுத் தோல்கள் ஒவ்வொன்றிற்கும் அனுபந்ததில் உள்ள பட்டியல்படி கட்டணம் தனித்தனியாகவும், பாரமேற்றி வரும் வாகனங்களுக்கு பாலி வாகனத்திற்கான சுங்கம் வசூல் தனியாகவும் வசூல் செய்யப்படும்.
3. ஈச்சர் லாரி, டெம்போக்களில் வரும் பாரங்கள் மூட்டையாக இருந்தால்,20 மூட்டைக்கு மேல் இருந்தால், மூட்டைக்கு 20 ரூபாயும் பைகளாக இருந்தால் 30 பைகளுக்கு மேல் இருந்தால் பை ஒன்றுக்கு 10 ரூபாயும் கட்டணமாக வசூலிக்கப்படும்.
4. லாரிகளில் வரும் பாரங்களில் மூட்டையாக இருந்தால், 30 மூட்டைக்கு மேல் இருந்தால் மூட்டை ஒன்றுக்கு 20 ரூபாயும், பைகளாக இருந்தால் 40 பைகளுக்கு மேலும் வந்தால் பை ஒன்றுக்கு 10 ரூபாயும் கட்டணமாக வசூலிக்கப்படும்.
5. மேற்கண்ட அனுபந்தத்தில் குறிப்பிட்டள்ளவைகளின் சுங்க வசூல் மற்றும் சந்தைக்குள் செய்யப்படும் வசூல் அனைத்தும் வாரச்சந்தை மற்றும் தினசரி சந்தைக்கும் பொருந்தும்.
6. தினசரி சந்தை அதிகாலை 4.00 மணி முதல் மாலை 6.00 வரை மட்டுமே செயல்பட வேண்டும்.
7. பிரதி வாரம் வியாழக்கிழமை தவிர்த்து மற்ற நாட்களில் தினசரி சந்தை செயல்படும்.
8. வியாழக்கிழமை அன்று வாரச்சந்தை செயல்படாத நிலையில் தினசரி சந்தை செயல்படும்.
9. வாரச்சந்தை முன்கூட்டியோ அல்லது பின்னரோ நடைபெறும் பட்சத்தில் அன்று தினசரிசந்தை நடைபெறாது.

**2. தினசரி சந்தையில் புதிதாகக் கட்டப்பட்டுள்ள நவீன கட்டணக் கழிப்பிடத்தில் கட்டணம் வசூலிக்கும் உரிமம்**

| வ. எண் | உரிமங்களின் பெயர் | உரிமத்திற்கு செலுத்த வேண்டிய ஏல வைப்புத் தொகை | உரிமத்திற்கு செலுத்த வேண்டிய கூடுதல் வைப்புத் தொகை(வங்கி வரைவோலையாக) | ஏலம் உறுதியான பின் செலுத்த வேண்டிய (ஏல முன் வைப்புத் | வருமான வரிச் சட்டத்தின் படி செலுத்த வேண்டிய வருமான |
|---|---|---|---|---|---|

| | | | | தொகை நீங்களாக) | வரி மற்றும் GST வரி |
|---|---|---|---|---|---|
| 1 | தினசரி சந்தையில் உள்ள ஆண்கள் கழிப்பிடம் –1 மற்றும் பெண்கள் கழிப்பிடம் –1 கட்டணம் வசூல் செய்யும் உரிமம் | ரூ.50,000/– | ரூ.50,000/– | ஏலத்தொகையில் 12 மாத உரிம தொகை கூடுதல் வைப்புத் தொகையாக செலுத்த வேண்டும். | 2% IT 18% GST |

1. குத்தகைதாரர் வசம் ஒப்படைக்கப்படும் கட்டிடம் அதனைச் சார்ந்துள்ள பகுதிகள் செப்டிக்டேங்குகள் மற்றும் பிட்டிங்களுக்கோ கேடு வராவண்ணம் கண்காணித்துக் கொள்ள வேண்டும். கட்டிடதிற்கோ அதனைச் சார்ந்த பகுதிக்கோ மற்றும் பிட்டிங்களுக்கோ சேதாரம் ஏற்பட்டால் குத்தகைதாரர் அவரது பொறுப்பிலும் செலவிலும் நகராட்சியால் அறிவிக்கும் வகையில் சரிசெய்ய வேண்டும் அல்லது சேதாரத்திற்காக நகராட்சியால் அறிவிக்கும் நஷ்ட ஈட்டினை செலுத்த வேண்டும்.
2. அத்தியாவசயமானதும் உடனுக்குடன் கவனிக்க வேண்டியதுமான பைப் பிட்டிங்களில் மற்றும் கழிப்பறை குழாய்கள் பேசின்கள் பழுதடைந்தால் குத்தகைதாரர் உடனுக்குடன் நகராட்சிக்கு தெரிவித்து நகராட்சி ஒப்புதலுடன் தமது சொந்த செலவில் வாசகத்துடன் போர்டு நிறுவ வேண்டும்.
3. குத்தகைதாரர் தம் சொந்த செலவில் ஆண், பெண் உருவத்துடன் அந்த பகுதி கழிப்பறைகள் முன்னர் கீழ்க்கண்ட வாசகத்துடன் போர்டு நிறுவ வேண்டும்.

| | ஆண்/பெண் |
|---|---|
| உபயோகிக்கும் நேரம் | காலை 4.30 மணி முதல் இரவு 11.00 மணி வரை |

4. கழிப்பறைகளைத் தவிர இதர பகுதிகளிலும் யாரும் மலம் கழிக்கவோ சிறுநீர் கழிக்கவோ அனுமதிக்காது கண்காணித்து வரவேண்டும். மேலும், கழிப்பறைகளின் சுற்றுப்புறத்தை எப்பொழுதும் தூய்மையாக வைத்திருக்க வேண்டும்.
5. கழிப்பறைகளின் மின்சாரக் கட்டணம் மாதமாதம் குத்தகைதாரரே தனது சொந்த பொறுப்பில் செலுத்தி வரவேண்டும். மின்சார வாரியத்திற்கு செலுத்த வேண்டிய வைப்புத் தொகையை குத்தகை உறுதி செய்யப்பட்டவுடன் செலுத்தி மின் இணைப்பு பெற்றுக் கொள்ள வேண்டும்.
6. கழிப்பிடங்களுக்கு வழங்கும் தண்ணீர், மின் மோட்டார் பழுது மற்றும் மின் தடை காரணங்களால் தண்ணீர் விநியோகம் தடைபட்டால், குத்தகைதாரர் தனது சொந்த பொறுப்பில் தண்ணீர் எடுத்துக் கொள்ளவேண்டும். இதற்கு நகராட்சி பொறுப்பாகாது. மேலும் இந்த மாதிரியான சந்தர்ப்பங்களில் தண்ணீர் விடப்படவில்லை என எவ்விதமான முன்னுரிமையும் கோரக்கூடாது.
7. எப்போதும் ஆண், பெண் கழிப்பறைகளை தூய்மையாக வைத்திருப்பதற்காக ஆண் பகுதிக்கு ஆண் தூய்மை பணியாளரையும், பெண் பகுதிக்கு பெண் தூய்மை பணியாளரையும்தனித்தனியே குத்தகைதாரர் தமது சொந்த செலவில் நியமிக்க வேண்டும். நிர்ணயிக்கப்பட்ட கட்டணத்திற்கு மேல் பொதுமக்களிடம்

வசூலிக்கக்கூடாது. பொதுமக்களிடம் முறையாக நடந்து கொள்ளும் பொறுப்பு குத்தகைதாரரைச் சேர்ந்தது.

8. கழிப்பறைகள் எப்போதும் சுத்தமாக வைத்திருக்கும் வகையில் ஆண், பெண் ஒவ்வோரு பகுதியிலும் பக்கெட், சீமாறு, பினாயில், பிளீச்சிங் பவுடர் ஆகியவற்றை எப்பொழுதும் வைத்திருக்க வேண்டும். அடிக்கடி சுத்திகரிப்புகளை உபயோகித்து கழிப்பறைகளை சுகாதார முறையில் பாதுகாக்க வேண்டும்.
9. கழிப்பறைகளை உபயோகிப்போர் வசதிக்கென ஒவ்வொரு இருக்கையில் சிறிய பக்கெட்டோ பிளாஸ்டிக் குவளையோ வைத்திருக்க வேண்டும். கழிப்பிடங்களில் உள்ள கழிவுகளை தண்ணீர் ஊற்றி கழுவி சுகாதாரமாக வைத்துக் கொள்ள வேண்டும். மேலும், அவ்வப்போது கிருமி நாசினி தெளிக்க வேண்டும்.
10. நகராட்சி ஆணையர், நல அலுவலர், பொறியாளர் அல்லது அவர்களது அதிகாரம் பெற்ற நகராட்சி அலுவலர் கழிப்பறைகளைப் பார்வையிட்டு அறிவிக்கும் குறைகளை அவ்வப்போது நிவர்த்திக்க வேண்டும்.
11. செப்டிக்டேங் நிரம்பி வழியாவண்ணம் பார்த்துக் கொள்வதோடு செப்டிக்டேங் நிரம்புவதற்கு ஒருவாரகாலத்திற்கு முன்னதாகவோநகராட்சிக்குதெரிவித்து கழிவுகளை அகற்ற ஏற்பாடு செய்ய வேண்டும். கழிவுகளை நகராட்சி முலம் அகற்றுவதற்கு உரிய கட்டணத்தை குத்தகைதாரர் செலுத்த வேண்டும்.
12. செப்டிக்டேங் நிரம்பி வழியாவண்ணம் பார்த்துக் கொள்வதோடு 15 நாட்களுக்கு ஒருமுறை நகராட்சிக்கு தெரிவித்து செப்டிக்டேங்கின் கழிவுகளை அகற்ற ஏற்பாடு செய்ய வேண்டும். கழிவுகளை நகராட்சி மூலம் அகற்றுவதற்கு உரிய கட்டணத்தை குத்தகைதாரர் செலுத்த வேண்டும்.
13. குத்தகைதாரர் குத்தகை நிபந்தனைகளையும் அவ்வப்போது நகராட்சியால் விதிக்கப்படும் நிபந்தனைகளையும் கட்டாயம் அனுசரித்து வரவேண்டும். அவ்விதம் ஏதாவது நிபந்தனைகளை அனுசரிக்க தவறினால் தவறும் ஒவ்வொரு முறைக்கும் ரூ.500-க்கு மேற்படாமல் அபராதம் விதிக்கவோ அல்லது குத்தகைதாரரது பொறுப்பில் குத்தகை ரத்து செய்யவோ ஆணையாளருக்கு அதிகாரமுண்டு.
14. நகராட்சி நிர்ணயம் செய்துள்ள கட்டணம் மட்டும் பொது மக்களிடம் வசூல் செய்ய வேண்டும். கூடுதல் கட்டணம் வசூல் செய்வதாக தெரிய வந்தால் எவ்வித முன் அறிவிப்பு வழங்காமல் உடனடியாக குத்தகை உரிமம் இரத்து செய்யப்படும்.
15. குத்தகைதாரர் கட்டண கழிப்பறைக்கு நகராட்சி நிர்ணயம் செய்துள்ள கட்டணம் மற்றும் வரிசை எண்ணுடன் இரசீது புத்தகம் அவரது செலவில் அச்சடித்துக் கொள்ள வேண்டும். அச்சிட்ட இரசீது புத்தகம் எவ்வளவு என்பதை தனியாக பதிவேடு ஒன்று வைத்துக் கொள்ள வேண்டும். இரசீது புத்தகம் ஒவ்வொரு வாரம் முதல் அலுவலக வேலை நாளில் நகராட்சி அலுவலகத்தில் நேரில் காண்பித்து ஆணையரின் கையொப்பம் பெற்றுக் கொள்ள வேண்டும். கழிப்பறை உபயோகிப்போரிடம் கண்டிப்பாக இரசீது வழங்க வேண்டும். ஆணையர் கையொப்பம் இல்லாத இரசீது ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.
16. நகராட்சி பொறுப்புள்ள அலுவலர்கள் ஆய்வு செய்யும் போது இரசீதுகள் காண்பிக்கப்பட வேண்டும்.

17. நகராட்சி நிர்ணயம் செய்துள்ள கட்டணத்தை பொதுமக்கள் அறியும் வகையில் பலகைகள் எழுதி கட்டணம் வசூல் செய்யயும் இடத்திற்கு முன்பாக குத்தகைதாரர் வைத்திருக்க வேண்டும்.
18. கழிப்பிடங்களில் கீழ்க்கண்ட கட்டணங்கள் மட்டும் வசூல் செய்ய வேண்டும்.
    1. சிறுநீர் கழிக்க ஒருமுறைக்கு நபர் ஒன்றுக்கு ரூ.1.00, மலம் கழிக்க ஒருமுறைக்கு நபர் ஒன்றுக்கு ரூ.3.00 மற்றும் குளிப்பதற்கு ஒன்றுக்கு ரூ.5.00
19. பொதுநிபந்தனைகள் அனைத்தும் இதற்கு பொருந்தும்

3.தினசரி சந்தையில் கேண்டின் உரிமம்

| வ. எண் | உரிமங்களின் பெயர் | உரிமத்திற்கு செலுத்த வேண்டிய ஏல வைப்புத் தொகை | உரிமத்திற்கு செலுத்த வேண்டிய கூடுதல் வைப்புத் தொகை(வங்கி வரைவோலையாக) அல்லது அதற்கு ஈடான தேசியமயமாக்கப்பட்ட வங்கி உத்திரவாத சான்று | ஏலம் உறுதியான பின் செலுத்த வேண்டிய (ஏல முன் வைப்புத் தொகை நீங்களாக) | வருமான வரிச் சட்டத்தின் படி செலுத்த வேண்டிய வருமான வரி மற்றும் GST வரி |
|---|---|---|---|---|---|
| 1 | தினசரி சந்தையில் புதிதாக கட்டப்பட்டுள்ள 11.50x42.25 அளவுள்ள கேண்டின் குத்தகை | ரூ.50,000/- | ரூ.50,000/- | ஏலத்தொகையில் 12 மாத உரிமதொகை கூடுதல் வைப்புத் தொகையாக செலுத்த வேண்டும் | 2% IT<br>18% GST |

4.2024-2025 முதல் வாரச்சந்தையில் சுங்கம் வசூலிக்கும் உரிமம், பேருந்து நிலையத்தில் உள்ள கட்டண கழிப்பிடம், திரு.வி.க.திடல் கட்டண கழிப்பிடம் மற்றும் வாரச்சந்தையில் உள்ள கட்டண கழிப்பிடம்

| வ. எண் | உரிமங்களின் பெயர் | உரிமத்திற்கு செலுத்த வேண்டிய ஏல வைப்புத் தொகை | உரிமத்திற்கு செலுத்த வேண்டிய கூடுதல் வைப்புத் தொகை(வங்கி வரைவோலையாக) | ஏலம் உறுதியான பின் செலுத்த வேண்டிய (ஏல முன் வைப்புத் தொகை நீங்களாக) | வருமான வரிச் சட்டத்தின் படி செலுத்த வேண்டிய வருமான வரி மற்றும் GST வரி |
|---|---|---|---|---|---|

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | புன்செய்ப் புளியம்பட்டியில் புதன்கிழமை மற்றும் வியாழன் தோறும் கூடும் வாரச் சந்தையில் சுங்கம் வசூலிக்கும் உரிமம் | ரூ.5,00,000/– | 15,00,000/–க்கு சொத்து மதிப்பு சான்று அல்லது கூடுதல் வைப்புத்தொகையாக ரூ.5,00,000/– | ஏலத்தொகையில் 12 மாத உரிம தொகை கூடுதல் வைப்புத் தொகையாக செலுத்த வேண்டும் | 2% IT<br>18% GST |
| 2 | பேருந்து நிலையத்தில் உள்ள கட்டண கழிப்பிடத்தில் கட்டணம் வசூலிக்கும் உரிமம் | ரூ.1,50,000/– | ரூ.1,50,000/– | ஏலத்தொகையில் 12 மாத உரிம தொகை கூடுதல் வைப்புத் தொகையாக செலுத்த வேண்டும் | 2% IT<br>18% GST |
| 3 | திரு.வி.க. திடலில் உள்ள கட்டண கழிப்பிடத்தில் கட்டணம் வசூலிக்கும் உரிமம் | ரூ.25,000/– | ரூ.25,000/– | ஏலத்தொகையில் 12 மாத உரிம தொகை கூடுதல் வைப்புத் தொகையாக செலுத்த வேண்டும் | 2% IT<br>18% GST |
| 4 | வாரச்சந்தையில் உள்ள கட்டண கழிப்பிடத்தில் கட்டணம் வசூலிக்கும் உரிமம் | ரூ.15,000/– | ரூ.15,000/– | ஏலத்தொகையில் 12 மாத உரிமதொகை கூடுதல் வைப்புத் தொகையாக செலுத்த வேண்டும் | 2% IT<br>18% GST |

<u>பொதுநிபந்தனைகள்</u>

1. நகராட்சிக்கு சொந்தமான தினசரிசந்தை/வாரச்சந்தை/கேண்டீன்/கட்டண கழிப்பிடங்கள் அனைத்திற்கும் மேற்கண்ட நிபந்தனைகள் பொருந்தும். மூன்று வருட உரிமம் என்பதால் ஏலம் முன் வைப்புத் தொகை நீங்கலாக ஏலத்தொகையில் 12 மாத கால தொகை கூடுதல் வைப்புத் தொகையாக மற்றும் சரக்கு மற்றும் சேவை வரி 18% செலுத்தப்பட வேண்டும். ஒப்பந்ததாரர்/ குத்தகைதாரர் ஒரு வருட குத்தகை உரிமத்தொகை செலுத்தப்பட்ட பின்பு வேலை உத்தரவு வழங்கப்படும். மேலும், கடைகள்/ குத்தகை உரிமம் நகராட்சிச் சட்டம் மற்றும் அரசாணைகளுக்குட்பட்டு நடத்திக் கொள்ளப்பட வேண்டும்.
2. ஒப்பந்த விதிகளுக்கு முரணாகவோ அல்லது நான் அளித்துள்ள உறுதிமொழி பத்திரத்திற்கு எதிராகவோ நான் நடந்து கொண்டால் எதிர்காலத்தில் நடைபெறும் ஏலம் மற்றும் ஒப்பந்தபுள்ளியில் நானோ அல்லது என்னுடைய வாரிசுதாரர்களோ பங்கேற்க முடியாது என்பதை நான் நன்கு அறிவேன்.
3. 2023–2024ம் ஆண்டிற்கான பொதுஏலம் மற்றும் ஒப்பந்தபுள்ளி நிபந்தனைகளுக்குட்பட்டும், தமிழ்நாடு அரசு சென்னை நகராட்சி நிர்வாக

ஆணையாளர் அவர்கள் அவ்வப்போது பிறப்பிக்கப்படும் நெறிமுறைகளுக்கு கட்டுப்பட்டு நடந்து கொள்வேன்.

4. நகராட்சி அனுமதியின்றி கட்டுமானத்தில் எவ்வித மாறுதலும் செய்யமாட்டேன் தன்னிச்சையாகவும் செயல்படமாட்டேன். மேலும் மேற்படி நகராட்சி சொத்திற்கு ஊறுவிளைவிக்கமாட்டேன் என உறுதியளிக்கிறேன். நகராட்சி சொத்துக்கு சேதாரம் ஏற்பட்டால் அதற்கான இழப்பீடு தொகையை முழுமையாக செலுத்த சம்மதிக்கிறேன்.
5. தீ விபத்து மற்றும் இயற்கை இடர்பாடுகளினாலோ கட்டுமானத்திற்கு அல்லது தொழிலுக்கு பாதிப்பு ஏற்பட்டால் நகராட்சி பொறுப்பு ஏற்காது என்பதையும் அறிவேன்.
6. மேற்படி குத்தகை விடப்பட்ட கடையினை பொதுநலன் கருதி நகராட்சியால் காலிசெய்ய அறிவிக்கும் பட்சத்தில் எவ்வித ஆட்சேபனையின்றி நகராட்சி வசம் ஒப்படைப்பேன்.
7. மேற்படி கடைக்குரிய மின்சாரகட்டணம் எனது சொந்த பொறுப்பில் செலுத்திவிடுவேன்.
8. எனக்கு விடப்பட்ட கடையினை வேறு நபர்க்கு உள்குத்தகைக்கு விடமாட்டேன் என்றும் அவ்வாறு நகராட்சிக்கு தெரியவந்தால் நகராட்சியால் எடுக்கப்படும் சட்டதிட்டங்களுக்கு கட்டுப்படுவேன்.
9. தணிக்கையில் ஏதும் நிதியிழப்பு போன்ற ஆட்சேபனை எழுப்பப்பட்டால் மேற்படி தணிக்கை ஆட்சேபனைக்குட்பட்டு அத்தொகையை நகராட்சிக்கு செலுத்தவும் உறுதியளிக்கிறேன்.
10. நகராட்சியால் அனுமதிக்கப்பட்ட பரப்பளவில் மட்டுமே தொழில் புரிவேன். அதிகப்படியான பரப்பளவை ஆக்கிரமித்து போக்குவரத்திற்கும், பொதுமக்களுக்கும் இடையூறு ஏற்படும் வண்ணம் தொழில் புரியமாட்டேன் என்று உறுதி கூறுகிறேன்.
11. பொதுமக்களுக்கோ நகராட்சியின் உடமைக்கோ தீங்கு விளைவிக்கின்ற வகையில் தொழில் புரியமாட்டேன் என்று உறுதி அளிக்கிறேன்.
12. நகராட்சி கடையின் முகப்பில் தனிமனிதன் பெயர் மற்றும் அரசியல் கட்சியின் வண்ணங்கள் அமைத்த பலகையை பொருத்தமாட்டேன் என்று உறுதி அளிக்கிறேன்.
13. முழு சுகாதார பணியினை பேணும் பொருட்டு செயல்படுவேன்.
14. உரிமக்கால முதலாம் ஆண்டில் செலுத்தப்படும் முன்வைப்புத்தொகையை குத்தகைகாலம் முடியும் தருவாயில் ஈடு செய்யப்படும் என அறிவேன்.
15. உரிமை வழங்கப்பட்ட உரிமக்காலம் முடியும் தேதியில் மாலை 05.00 மணி வரை மட்டுமே என்பதையும் மேற்கொண்டு உரிமத்தை புதுப்பித்தல் நகர்மன்றத்தின் முடிவை பொறுத்தது என்பதையும் நன்கு அறிவேன்.
16. உரிமகாலம் முடிந்தவுடன் கடைசி தேதி மாலை 5.00 மணிக்கு கடையின் சாவியை நகராட்சியில் ஒப்படைப்பேன் என்று உறுதியளிக்கிறேன்.
17. நடைமுறையில் உள்ள நகராட்சியின் சட்டதிட்டங்களுக்கு கட்டுப்பட்டு நடப்பேன் என உறுதி அளிக்கிறேன்.
18. நகராட்சிக்கு செலுத்தப்படும் டேவணித்தொகை மற்றும் முன்வைப்புத்தொகைக்கு வட்டி ஏதும் வழங்கப்படமாட்டாது என்பதை நன்கு அறிவேன்.

19.1994-ம் வருடத்திய நிதிசட்டம் வ.எண்.90(9) செக்ஷன் 65-ன்படி உரிம வாடகை தொகைக்கு 18% சேவைவரி(GST) மாதவாடகையுடன் சேர்த்து செலுத்தப்படவேண்டும் என்பதை அறிவேன்.

20.அரசு ஆணை எண்.92 ந.நி.ம.கு துறை நாள்:03.07.2007 இன் படி கட்டுப்படுவேன் என்பதை அறிவேன்.

21. அரசாங்கத்தால் உரிமம் பெற்று செய்யக்கூடிய தொழில்களை முறையாக அரசிடம் உரிமம் பெற்றபின் பேதுவக்குவேன் என்றும் சட்டவிரோத வகை நடவடிக்கைகள் எதையும் செய்யமாட்டேன் என உறுதியளிக்கிறேன்.

22. 2021-2022 முதல் 2023-2024 ஆம் ஆண்டின் ஏல அறிக்கையில் பொது மற்றும் சிறப்புநிபந்தனைகளை படித்துப்பார்த்துக் கொண்டதாகவும் விபரம் அறிந்து கொண்டதாகவும் கையெழுத்து செய்து கொடுக்க வேண்டும்.

மேற்படி நடவடிக்கைகள் மேற்கொள்ளவும், மேற்கண்ட நிபந்தனைகளை மாவட்ட அரசிதழில் வெளியீடு செய்வதற்கும், செய்தித்தாள்களில் விளம்பரம் செய்யவும், ஒப்பந்தப்புள்ளி கோர ஏற்படும் உத்தேச வெலவினம் ரூ.2.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

(ந.க.எண்.825/2023/அ1)

அலுவலகக்குறிப்பு :-

அ) மன்றம் அனுமதிக்கலாம்

ஆ)நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று மேல்நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் ஏற்கலாம்.

**தீர்மான எண் : 188**

**தீர்மானம் : தற்போது ஒரு வருட காலம் வாடகைத்தொகை கூடுதல் வைப்புத்தொகையாக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. நிர்ணயிக்கப்பட்ட தொகை அதிக்கப்படியாக உள்ளதால் ஆறு மாத கால வாடகைத்தொகையை கூடுதல் வைப்புத்தொகையாக நிர்ணயம் செய்ய மன்றம் அனுமதிக்கப்படுகிறது.**

(ஓம்)திரு.தி.ஜனார்த்தனன்,
நகர்மன்ற தலைவர்
புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சி

//உண்மைநகல் உத்தரவுப்படி//

13/12/23

ஆணையாளர்(மு.கூ.பொ)
புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சி

13/12/23